# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## C.C. No. 47 /2017

2022 ம் ஆண்டு மார்ச் மாதம் 23 ம் நாள் புதன் கிழமை அரசுத்தரப்பு சாட்சி - 03 , திரு.கலியமூர்த்தி என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜா, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.கலியமூர்த்தி | வயது | : |
| த.பெ/ க.பெ. | : | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | சாதி | : |
| மாவட்டம் | : | | |

**முதல் விசாரணை**

நான் பொற்பதிந்தநல்லூரில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அ.சா.1 முருகனைத் தெரியும். அ.சா.2 ராஜா சுவாமிநாதனைத் தெரியும். எனக்கு பொற்பதிந்தநல்லூரில் சொந்தமாக நிலம் உள்ளது. அணைக்குடம் கூட்டுறவு வங்கியின் எல்லைக்குட்பட்டு அந்த நிலம் உள்ளது. அந்த வங்கியில் நான் உறுப்பினராக இருந்தேன். எனது உறுப்பினர் எண் 2026. சேமிப்புக் கணக்கு எண் 168. அந்த வங்கியில் நான் பயிர்க்கடன் வாங்கியிருந்தேன். அந்த பயிர்க்கடன் எண் 427. மறுபடியும் பயிர்க்கடன் கோரி மனுக் கொடுத்திருந்தேன். பயிர்க்கடனாக ரூ.11,000, ரூ.12,000/- வழங்கினார்கள். பணமாக கையில் கொடுக்கவில்லை. உரம் கொடுப்பதற்காக எதிரி ராமலிங்கம் என்னிடம் பில் எழுதி கையெழுத்து வாங்கிக்கொண்டார். உரம் ரூ.350/-க்காக இருக்கும். சரியாக ஞாபகமில்லை. விதைக்கு ரூ.6,000/-, பூச்சிமருந்து ரூ.100/- என பணம் ஒதுக்கப்பட்டது. பணம் கணக்கில் மூன்று நாட்கள் கழித்துத்தான் ஏறும் என செகரட்டரி கந்தவேல் சொன்னார். அந்த பணம் எனது கணக்கில் ஏறவில்லை. எனக்கு உரம், விதைகள், பூச்சிமருந்து ஆகியவைகள் வழங்கப்படவில்லை. இரண்டு வருடங்கள் கழித்து விசாரணை அதிகாரி துணை பதிவாளர் என்னுடைய கணக்கில் வரவு வைக்காமல், கையாடல் நடந்ததாக சொன்னார். துணை பதிவாளர் அணைக்குடம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகளின் தரப்பில் கு/வி**

நான் சொசைட்டி ரிஜிஸ்டரில் கையெழுத்து செய்தேனா என்றால் கையெழுத்து செய்தேன். ரொக்க ரசீதிலும் கையெழுத்து செய்தேன். அவ்வாறு கையெழுத்து செய்தவுடன் எனக்கு சேர வேண்டிய கடன் தொகையை கையில் கொடுத்து விட்டார்களா என்றால் பணம் கொடுக்கவில்லை. பணம் கொடுக்கவில்லையென மேலதிகாரியிடம் புகார் கொடுக்கவில்லை. இரண்டு வருடங்கள் கழித்துத்தான் அதிகாரியிடம் பணம் கொடுக்கவில்லையென சொன்னேன். நான் ஏற்கனவே பணம் வாங்கிவிட்டேன் என்றும், சொசைட்டியில் உள்ள தலைவருக்கும், செயலாளருக்கும் உள்ள விரோதம் காரணமாக பணத்தை வாங்கவில்லை என நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வாங்கிய கடன் தொகைகளை வட்டியுடன் திரும்ப செலுத்திவிட்டேன் என்றால் கட்டவில்லை.பணம் கட்டியது எனக்கு ஞாபகம் இருக்கிறதா என்றால் ஞாபகமில்லை. கடன் தொகைகளை வட்டியுடன் செலுத்திவிட்டு, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/-செ.சுப்ரமணி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,

ஜெயங்கொண்டம்.